மேலும், அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட, மாங்காட்டுச்சேரி ஊராட்சியில் இருக்கின்ற அருந்ததிபாளையம், அரிகலபாடி ஊராட்சியில் இருக்கின்ற அம்பேத்கர் நகர் ஆகிய பகுதிகளில் வாழும் குழந்தைகள் நீண்ட தூரம் நடந்து அங்கன்வாடிக்குச் செல்கிறார்கள். அவர்களுக்கு அங்கேயே அங்கன்வாடி மையங்கள் புதியதாகத் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அங்கன்வாடி மையம் அமைய வேண்டுமென்று சொன்னால், அது ஊரகப் பகுதியாக அல்லது நகர்ப்புறப் பகுதியாக இருந்தால் குறைந்தபட்சம் மக்கள்தொகை 400 ஆகவும், அதிகபட்ச மக்கள்தொகை 800 ஆகவும் இருக்க வேண்டும். அது மலைப் பகுதியாக இருந்தால் மக்கள்தொகை 300 ஆக இருக்க வேண்டும். குறு மையம் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் மக்கள்தொகை 150 ஆகவும், அதிகபட்சம் 400 ஆகவும் இருக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. புதியதாக அங்கன்வாடி மையங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தப் பகுதிகளின் மக்கள்தொகையைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அந்தக் குழு முடிவு செய்து, அதன்பிறகு அங்கன்வாடி மையம் தொடங்குவதற்கு வழிவகைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த ஊர்கள் என்று குறிப்பிட்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தருவார்களேயானால், உடனடியாக அதை ஆய்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 308, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 21]

308—

கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டடம்

***37345-திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குப்பங்குழி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் உள்ள குப்பங்குழி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 1976 ஆம் ஆண்டு கிடங்குடன்கூடிய அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு, கீழ்த் தளம் கிடங்காகவும், முதல் தளம் அலுவலகமாகவும் செயல்பட்டு வந்தது. இந்நிலையில் அலுவலகம் செயல்பட்டு வந்த முதல் தளம் மட்டும் பழுதடைந்ததால், 1999 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 3 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கிடங்குடன்கூடிய அலுவலகக் கட்டடத்தில் தற்போது இச்சங்கத்தின் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. தேவைப்படின், இச்சங்கத்தின் நிதிநிலைக்கேற்ப புதிய கட்டடம் கட்ட பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, நீங்கள் இருளில் இருந்த தமிழகத்தை வெளிச்சத்திற்கு மாற்றிக் காட்டிய மெழுகுவர்த்தி; (மேசையைத்*

தட்டும் ஒலி) அம்மா! தங்கள் இரு விரல் அசைவால் இணையற்ற வரங்களை வாரிப் பொழியும் கார் மேகம்; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! தங்கள் ஆழ்ந்த ஞானத்தால், தாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்திக் காட்டும் நிலை கோபுரம். (மேசையைத் தட்டும் ஒலி) மெழுகுவர்த்தி, கார் மேகம், நிலை கோபுரம் இவை யாவும் தனக்காக வாழ்வது இல்லை. தனக்காக வாழாது, தமிழ் இனத்திற்காக வாழ்கின்ற தமிழ்த் தாயின் தலைமகள், (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வறியாது உழைக்கும் ஒப்பற்ற வெற்றித் திருமகள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாட்சிமைதாங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர் பாதங்களில் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தொகுதியில் உள்ள குப்பங்குழி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், மிகுந்த பாரம்பரியத்திற்குரிய கடன் சங்கம். அச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ள சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து, அங்கே புதிய சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டித் தர முடியுமா என்று கேட்டிருக்கின்றார்கள். இச்சங்கம் கடந்த 8 ஆண்டுகளாகத் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வந்தது. 2013–2014 மற்றும் 2014–2015 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும்தான் இலாபம் ஈட்டியுள்ளது. தற்போது இச்சங்கம் ஏறத்தாழ 76 இலட்சம் ரூபாய் அளவிற்கு cumulative loss-ல் உள்ளது. மேலும், இச்சங்கத்திற்குச் சொந்த இடமும் இல்லை. அதுமட்டுமல்ல, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த நான்கே ஆண்டுகளில் ஏறத்தாழ 5,807 கட்டடங்களை புதியதாகக் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். குறிப்பாக, கிடங்குகள் 3,879, நியாய விலைக் கடைகள் 1,394, அதுமட்டுமல்ல; மத்தியக் கூட்டுறவு

வங்கிக்கு 43 கட்டடங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 16 கட்டடங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு 2 கட்டடங்கள், பிரதம கூட்டுறவு பண்டகச் சாலைக்கு 7 கட்டடங்கள், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு 4 கட்டடங்கள், கூட்டுறவு அச்சகத்திற்கு 1 கட்டடம் என ரூ.547.52 கோடி செலவில் மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த நான்கே ஆண்டுகளில் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சங்கம் 22-4-2015 முதல் வேறோர் இடத்தில் பாதுகாப்பு வசதியுடன் செயல்பட்டு வருகிறது. இந்தச் சங்கத்திற்கு அங்கே சொந்த இடம் இல்லாத நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இடம் பார்த்துக் கொடுக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடத்தை உறுதியாகக் கட்டிக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 309, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

309—

பகுதிநேர நியாய விலைக் கடை

***32959—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பிலியவயல் ஊராட்சி, ஏத்தநாடு கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,